# மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின்
# 2020-2021-ம் நிதி ஆண்டு அறிக்கை

**(Annual Report)**

அரசாணை (எம்.எஸ்) எண்.57, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள்.19.05.2017, அரசாணை (எம்.எஸ்) எண்.90, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள்.27.07.2017 மற்றும் அரசாணை (எம்.எஸ்) எண்.81, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள்.14.08.2018-ன்படி உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ன்படி மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க. எண்.764/2017-கனிமம், நாள்.12.09.2017-ன்படி மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையானது கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டு, இவ்வறக்கட்டளையானது ஆவண எண்.119/2017/BK4, நாள்.21.09.2017-ன்படி தல்லாகுளம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | நிர்வாகக் குழு அமைப்பு | வ.எண் | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், மதுரை | 1. | மாவட்ட ஆட்சியர்,மதுரை |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், மதுரை | 2. | மாவட்ட வருவாய் அலுவலர்,மதுரை |
| 3. | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, மதுரை. | 3. | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, மதுரை. |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை | 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை |
| 5. | துணை இயக்குநர், (சுகாதாரம்), மதுரை | 5. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், (வளர்ச்சி), மதுரை |
| 6. | முதன்மைக் கல்வி அலுவலர், மதுரை | 6. | உதவி இயக்குநர் (பஞ்சாயத்து), மதுரை |
| 7. | மாவட்ட கருவூலஅலுவலர், மதுரை | 7. | மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர், மதுரை |
| 8. | மாவட்டசமூகநலஅலுவலர், மதுரை | 8. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், மதுரை |
| 9. | உதவி இயக்குநர் (பஞ்சாயத்து),மதுரை | 9. | மாவட்ட வன அலுவலர்,மதுரை |
| 10. | திரு. எ. ரவீந்திரன்,<br>எண். 30, சங்கர்நகர் 3வது தெரு, கோ.புதூர், மதுரை<br>(அரசுசாரா அலுவலர்) | 10. | முதன்மைப் பொறியாளர்,<br>பொ.ப.து,நீ.ஆ.அ,மதுரை |
| 11. | திரு. எஸ்.எல். சொக்கலிங்கம்,<br>கூடுதல் இயக்குநர், (ஓய்வு),<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சென்னை | 11. | உதவி இயக்குநர், நில அளவை, மதுரை |

| | | | |
|---|---|---|---|
| | | 12. | மாவட்ட கருவூல அலுவலர்,மதுரை |
| | | 13. | மாவட்ட சமூக நல அலுவலர், மதுரை |
| | | 14. | துணை இயக்குநர், (சுகாதாரம்), மதுரை |
| | | 15. | இணை இயக்குநர், (வேளாண்மை), மதுரை |
| | | 16. | தொழிலாளர் ஆய்வாளர், மதுரை |

மதுரை மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, பாரத ஸ்டேட் வங்கி, வணிகவரி அலுவலக கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண். 37193268816) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளைக்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தில் 16 பெருங்கனிம சுரங்கக் குத்தகை உரிமங்களும், 90 சிறு கனிம குவாரி (103 கிரானைட் குவாரிகள் நீங்கலாக) குத்தகை உரிமங்களும் நடப்பிலுள்ளன. நடப்பிலுள்ள 16 பெருங்கனிம உரிமங்களும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் இசைவு பெற்று சமர்ப்பிக்காத காரணத்தினாலும், வேறு சில காரணங்களுக்காகவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் நடப்பிலுள்ள 90 சிறுகனிம குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையும் கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தில் 111 கிராம ஊராட்சிகள் சுரங்கப் பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன.

மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.03.2021 வரை **ரூ.3,51,48,303/- (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்து ஒரு இலட்சத்து நாற்பத்து எட்டாயிரத்து முன்னூற்று மூன்று மட்டும்)** வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இதில் 2020-2021 ஆண்டிற்கு மட்டும் **ரூ.73,60,297/- (ரூபாய் எழுபத்து மூன்று இலட்சத்து அறுபதாயிரத்து இருநூற்று தொன்னூற்று ஏழு மட்டும்)** கனிமக் கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்பட்டுள்ளது.

2020-2021 ஆம் நிதியாண்டில் கோவிட்-19 பெருந்தொற்று காலத்தில் முன்களப் பணியாளர்களாக பணியாற்றிய 9000 அரசு ஊழியர்களுக்காக விட்டமின் மாத்திரைகள், ஜிங்க் மாத்திரைகள் மற்றும் ஆர்சானிக் ஆல்பம் 30 ஆகிய மாத்திரைகள் ஆகியவற்றை மாவட்ட கனிம அறக்கட்டளை மூலமாக வழங்க மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க. எண். 764/2017-கனிமம், நாள்.07.07.2020-ன்படி ஆணையிடப்பட்டது. அதன்படி மேற்கண்ட மாத்திரைகள் வாங்குவதற்காக மதுரை மாவட்ட

கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியிலிருந்து ரூ.3,33,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

2018-2019 ஆம் நிதியாண்டில் மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக நிர்வாக மற்றும் நிதிசார்ந்த ஒப்புதல் வழங்கப்பட்டு **ரூ.1,49,750/- (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)** மதிப்பிலான 1 திட்டம் நிறைவடைந்துள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | கிராமம் மற்றும் வட்டம் | ஒதுக்கீடு செய்த தொகை (ரூ.) | ஒதுக்கீடு செய்யப்பட்ட தேதி | திட்டத்தின் நிலை |
|---|---|---|---|---|---|
| 1. | உலகானி கிராமத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைத்தல் | உலகாணி / கள்ளிக்குடி | ரூ. 1,49,750/- | 12.09.2018 | நிறைவடைந்து விட்டது |

ஏற்கனவே 2018-2019 ஆம் நிதியாண்டில் மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக **ரூ.60,000/- (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்)** மதிப்பில் நிர்வாக மற்றும் நிதிசார்ந்த ஒப்புதல் வழங்கப்பட்ட செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றிய பகுதியில் மின்விளக்குகள் அமைத்தல் திட்டமானது நீண்டகால நிலுவையின் காரணமாகவும், ஊராட்சி மன்ற தலைவர் இப்பணியினை மேற்கொள்ள ஆர்வம் காட்டாத நிலையில் இருப்பதால் மேற்கண்ட திட்டத்தினை இரத்து செய்து உத்தரவிடுமாறு செல்லம்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர் கோரியுள்ளார்.

மேலும் மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியிலிருந்து நிர்வாக செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட 6% நிதியிலிருந்து 1% தொகையை கனிம அறக்கட்டளையின் மாநில அளவிலான கண்காணிப்பு பணிகளுக்காக பயன்படுத்த இயக்குநர் அலுவலகத்தில் துவக்கப்பட்டுள்ள தனி வங்கி கணக்கில் மாதந்தோரும் செலுத்துமாறு அரசாணை பல்வகை எண்.112, தொழில் (எம்.எம்.டி-1) துறை நாள்: 30.05.2019-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி 01.04.2020 முதல் 31.03.2021 வரையிலான காலத்திற்கு வசூல் செய்யப்பட்ட தொகையில் 1% தொகையான **ரூ.77,453/-** (ரூபாய் எழுபத்து ஏழாயிரத்து நானூற்று ஐம்பத்து மூன்று மட்டும்) இயக்குநர் அலுவலகத்தில் துவக்கப்பட்டுள்ள தனி வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சென்னை அவர்களின் நேர்முக கடிதம் ந.க.எண்.3946/LC/2015, நாள்.17.03.2020-ன்படி ஒவ்வொரு மாதமும் வசூல் செய்யப்படும் தொகையில் நிர்வாக செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட 6% தொகையை தனி வங்கி கணக்கிற்கு மாறுதல் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி மதுரை மாவட்ட கனிம அறக்கட்டளை வங்கி கணக்கு தொடங்கிய நாள் 26.09.2017 முதல் 31.03.2021 வரை நிர்வாக செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டு செலவு செய்யப்பட்டது போக மீதமுள்ள தொகை **ரூ.7,72,767 (ரூபாய் ஏழு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரத்து எழுநூற்று அறுபத்து ஏழு மட்டும்)** தனி வங்கி கணக்கிற்கு **(மாநில பாரத வங்கி, வணிகவரி வளாக கிளை, சேமிப்பு கணக்கு எண்.39383933861)** மாற்றப்பட்டுள்ளது.

மதுரை மாவட்ட கனிம அறக்கட்டளைப் பணிகளை செவ்வனே செய்திடவும், கணினியில் தட்டச்சு செய்திடவும் தலைவர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண். 02/2020-டிஎம்எப்டி, நாள்.17.08.2020-ன்படி 17.08.2020 முதல் 16.07.2021 வரையிலான பதினோரு மாத காலத்திற்கு கணக்காளரர் (Accountant) ஒருவரையும், தரவு நுழைவு செய்பவர் (Data Entry Operator) ஒருவரையும், தலைவர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.02/2020-டிஎம்எப்டி, நாள்:16.11.2020-ன்படி 16.11.2020 முதல் 15.10.2021 வரையிலான காலத்திற்கு மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளைக்கு நீதிமன்ற தொடர்பு அலுவலர் (Liaison Officer) ஒருவரையும் தற்காலிக நியமனம் செய்யப்பட்டது.

**<u>2020-2021 நிர்வாக செலவுகள் செய்யப்பட்ட விபரம்:</u>**

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பு (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | தணிக்கையாளர், கணக்காளர், கணிணி இயக்குபவர் மற்றும் நீதிமன்ற தொடர்பு அலுவலர் ஆகியோருக்கு வழங்கப்பட்ட ஊதியம் | ரூ. 2,52,052/- |
| 2. | அரசாணை பல்வகை எண். 112, தொழில் (எம்.எம்.டி-1) துறை நாள்: 30.05.2019-ன்படி இயக்குநரகத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட 1% நிதி | ரூ. 77,453/- |
| 3. | மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் CCTV பொருத்துவதற்காக செலவு செய்யப்பட்ட தொகை | ரூ. 2,38,650/- |
| | **மொத்தம்** | **ரூ. 5,68,155/-** |

இவ்வறிக்கையானது மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் மேலாண்மை மற்றும் நிர்வாக குழு முன்பு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் செய்யப்பட்டது.

தலைவர், மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு
அறக்கட்டளை / மாவட்ட ஆட்சித்தலைவர்,
மதுரை.

13/12/22 13/12/22

13/12/22

20-21- Annual Report